செ.வெ.எண். 27/ஜூலை நாள்: 20.07.2016

**மாநில சமச்சீர் நிதி ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**



மாநில திட்ட ஆணையம் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் 10 மற்றும் 12-ம் வகுப்புகளில் பயிலும் மீத்திறன் மிக்க மாணவர்களின் கற்றல் அடைவுத்திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு திட்டக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் பயிலும் 10 மற்றும் 12 -ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் மாநில அளவில் தர வரிசையில் இடம் பெறுவதற்கும் மிக அதிக அளவில் அரசு மருத்துவக்கல்லூரிகள், சிறந்த பொறியியல் கல்லூரிகளில் சேரும் வகையில் இந்த சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கடந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி மாவட்டத்தின் சிறந்த ஆசிரியர்களை கொண்டு வகுப்பறை கற்பித்தல் நிகழ்வுகளை குறுந்தகட்டில் பதிவு செய்து காண்பிக்கப்பட்டது. பெரும்பாலான உறுப்பினர்கள் குறுந்தகடு (CD) மூலம் பாடப்பொருளை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் போது பாடங்கள் மிக எளிமையாக சென்றடையும் என கருத்து தெரிவித்தனர். கடினமான பாடப்பகுதிகள் (Hotspots) என்று சொல்லக்கூடிய பாடப்பகுதிகளை முதலில் பாடங்கள் வாரியாக கண்டறிந்து வீடியோ (CD) மூலம் பதிவு செய்து அடுத்த மாதம் ஆகஸ்ட் 19-ம் நாள் நடைபெற உள்ள ஆய்வுக் கூட்டத்தில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. மகேஷ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. குப்புசாமி, மாவட்ட ஊராட்சி செயலாளர் திருமதி. ஆர்த்தி, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் (பொ) திரு. பிரபாகரன், மாவட்ட கல்வி அலுவலர் (பொ) முனைவர் பாலாஜி, முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு. கோவிந்தசாமி, கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, அனைத்து உதவி மற்றும் கூடுதல் தொடக்கக் கல்வி அலுவலர்கள், செயலாக்கக்குழு உறுப்பினர்களான மேல்நிலை, உயர்நிலை பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்ற தனியார், அரசு பள்ளிகளின் தாளாளர்கள், முதல்வர்கள், தலைமையாசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.